TAMIL NADU LEGISLATIVE ... 9-OCT 1974 MADRAS

தமிழ் நாடு சட்டப் பேரவை.

———

வியாழக்கிழமை, 1974 மார்ச் 7.

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் புலவர் கா. கோவிந்தன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

1. வினாக்கள்—விடைகள்.

வெள்ளிக் குறியிட்ட வினாக்கள்.

Merger of Raffle and Small Savings Departments

* 311 *Q.*—THIRU P. SOUNDARAPANDIAN : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether there is any proposal to merge the Directorate of Tamil Nadu Raffle and Directorate of Small Savings; and

(*b*) if so, the reasons therefor?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : (அ) ஆம்.

(இ) பரிசுச் சீட்டு விற்பனை வசூல் குறைவாக உள்ளதால் இந்த இரு அலுவலகங்களையும் ஒன்றாக இணைக்க முடிவு செய்யப் பட்டது.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : இந்த இரண்டு அலுவலகங்களையும் இணைக்கின்ற காரணத்தால் அரசாங்கத்திற்கு எந்த எந்த வகையில் லாபமாக இருக்கிறது என்பதை அறியலாமா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : வேறு இலாக்காவில் டெபுடி டைரக்டராக இருந்தவர் இந்தப் பரிசுச் சீட்டு இயக்குநராக இருந்தார். அவர் இப்பொழுது அங்கிருந்து பழைய டெபுடி டைரக்டர் பதவியில் வேறு அலுவலகத்திற்கு மாற்றப்பட்டிருக்கிறார். அசிஸ்டென்ட் டைரக்டர் ஆஃப் பப்ளிசிடி ஒருவர் அந்த அலுவலகத்தில் இருந்தார். அவரும் அங்கிருந்து வேறு அலுவலகத்திற்கு மாற்றப்பட்டிருக்கிறார். அது மட்டுமல்லாமல், இந்த இரண்டும் இணைந்திருக்கிற காரணத்தால் ஏற்படுகின்ற அதிகப்படியான செலவு வேறு துறைக்கு மாற்றப்படுகிறது.

[1974 மார்ச் 7

திரு. வை. பாலசுந்தரம் : தலைவர் அவர்களே, இந்தப் பரிசுச் சீட்டுத் திட்டத்தை மாவட்டத்திற்கு மாற்றி, ஒவ்வொரு மாவட்டத் தலைநகரிலும் பரிசுச் சீட்டு குலுக்குவதாகக் குறிப்பு இருக்கிறதா ? அப்படிப்பட்ட நிலையை அரசு அங்கீகரித்தால் இங்குள்ளபடி ஒவ் வொரு மாவட்டத் தலைநகரிலும் அனுசரிக்கலாமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : எங்கே குலுக்கினாலும் அதிருஷ்டம் ஒன்றாகத்தான் இருக்கும். ஒவ்வொரு மாவட்டத் தலைநகரிலும் இந்தப் பரிசுச் சீட்டுகளைக் குலுக்குவதா என்பதைப் பற்றி அரசு முடிவு ஏதும் எடுக்கவில்லை.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : இந்த இரண்டு இலாக்காக் களும் ஒன்றாக இணைந்ததன் காரணமாக எத்தனை பேர் வேறு இலாக்காவிற்கு மாற்றப்படுகிறார்கள். யாருக்காவது வேலை இழப்பு ஏற்பட்டிருக்கிறதா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : நான் ஏற்கெனவே சொன்னேன். இதனால் வேலை இழப்பு ஏதும் ஏற்படவில்லை. டெபுடி டைரக்டரும், அசிஸ்டென்ட் டைரக்டர் ஆப் பப்ளிசிடியும் தான் அவரவர்களுடைய இலாக்காவிற்கு மாற்றப்பட்டிருக் கிறார்கள். இந்த இரு இலாக்காக்களின் இணைப்பினால் வேலை இழப்பு யாருக்கும் ஏற்படவில்லை.

திரு. ஜி. இராமசாமி : இந்தப் பரிசுத் சீட்டுத் திட்டத்தின் மூலமாக எவ்வளவு பணம் அரசாங்கத்திற்குக் கிடைத்துள்ளது ? அது எந்தெந்த வகைகளில் செலவழிக்கப்பட்டுள்ளது ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, இந்தப் பரிசுச் சீட்டுத் திட்டம் 1968-ஆம் ஆண்டு ஆரம்பிக்கப் பட்டது. இதுவரை மொத்த வருமானமாக முப்பத்துநான்கு கோடி சொச்சம் ரூபாய் கிடைத்தது. செலவுகள் போக நிகர வருமானமாக ரூ. 18,85,56,400 கிடைத்தது. இதிலிருந்து தேசிய பாதுகாப்பு நிதிக்கு ரூ. 2 கோடி தந்தோம். பிச்சைக்காரர் மறு வாழ்வு நிதிக்கு ரூ. 43 லட்சம் தந்தோம். ஸ்பெஷல் வெல்பேர் பண்டுக்கு 5 கோடி 34 லட்சம் ரூபாய் தரப்பட்டிருக்கிறது. மற்றும் கிராமப்புறங்களில் கல்வி வசதிகள், மருத்துவ வசதிகள் போன்றவற்றிற்கும் இந்தத் தொகையிலிருந்து செலவழிக்கப்பட் டிருக்கிறது.

1974 மார்ச் 7]

திரு. ஜே. ஜேம்ஸ் : பரிசுச் சீட்டுத் திட்டம் ஆரம்பித்த 1968-ம் ஆண்டில் எந்த அளவிற்கு விற்பனை ஆனது ? அது இப்பொழுது எந்த அளவிற்கு விற்பனை ஆகிறது ? எந்த அளவுக்கு விற்பனை குறைந்து காணப்படுகிறது என்பதை முதலமைச்சர் அவர்கள் கூறுவார்களா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : பரிசுச் சீட்டு விற்றது குறித்த விவரத்தை ஆண்டுவாரியாகச் சொல்லிவிடுகிறேன். இத் திட்டம் 1968-ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் ஆரம்பிக்கப்பட்டு 1969-ம் ஆண்டு மார்ச் மாதம் வரை மொத்த வருமானம் ரூ. 7,16,14,178. செலவு போக நிகர வருமானம் ரூ. 4,60,40,946.18. 1969-70-ம் ஆண்டு மொத்த வருமானம் ரூ. 7,04,52,721. செலவு போக நிகர வருமானம் ரூ. 3,70,80,989 சொச்சம். 1970-71-ம் ஆண்டு மொத்த வருமானம் ரூ. 8,50,42,177 சொச்சம். நிகர வருமானம் ரூ. 4,36,05,638 சொச்சம். 1971-72-ம் ஆண்டு மொத்த வருமானம் ரூ. 7,10,97,264 சொச்சம். நிகர வருமானம் ரூ. 4,31,50,971 சொச்சம். 1972-73-ம் ஆண்டு மொத்த வருமானம் ரூ. 2,50,11,811 சொச்சம். நிகர வருமானம் ரூ. 95,56,785. 1973-74-ம் ஆண்டு பிப்ரவரி முடிய மொத்த வருமானம் ரூ. 2,29,02,706 சொச்சம். நிகர வருமானம் ரூ. 1,18,70,058 சொச்சம்.

திரு. கோ. இளங்கோவன் : தலைவர் அவர்களே, வருமானம் குறைந்து வருகிற காரணத்தால் பரிசுச் சீட்டுத் திட்டத்தைக் கைவிடுகிற உத்தேசம் ஏதேனும் அரசுக்கு உண்டா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : கைவிடுவதாக உத்தேசம் இல்லை. ஆனால், இப்படிக் குறைந்து வருவதற்கு மிக முக்கிய மான காரணம்—1972-ம் ஆண்டு முதல் ஓராயிரம் ரூபாய்க்குமேல் யாராவது பரிசுச் சீட்டில் பரிசு பெற்றால் அதில் 34 சத வீதத்தை வருமான வரியாகத் தரவேண்டும் என்று மத்திய அரசு ஒரு புது அறிவிப்பைத் தந்ததற்குப் பிறகு இது வெகுவாகக் குறைந்துவிட் டிருக்கிறது. பரிசுச் சீட்டின் மூலமாக யாரும் எப்போதுமே சம்பாதித்துக் கொண்டிருப்பதில்லை. வாழ்க்கையில் எப்போ தாவது ஒரு முறை பரிசு விழுகிறது. இதற்கு வருமான வரி விதிக்காமல் இருந்திருந்தால் இவ்வளவு பெரிய சரிவு இந்த விற்பனையில் வந்திருக்காது என்பது அரசினுடைய எண்ணம்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

திரு. ஏ. சுப்பிரமணியம்: தலைவர் அவர்களே, 1972-73-ம் ஆண்டில் திடீர் என்று வருமானம் சரிந்திருக்கிறது. 1972-ம் ஆண்டு மதுவிலக்கை ரத்து செய்ததன் காரணமாக இம்மாதிரி சரிவு ஏற்பட்டதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: மது விலக்கை ரத்து செய்ததற்கும் இதற்கும் எந்தவிதமான சம்பந்தமும் கிடையாது. மதுவிலக்கை ரத்து செய்ததனால் ஒரு சீட்டுக்குப் பதிலாக இரண்டு சீட்டுகள் வாங்கியிருக்கலாமே அல்லாமல், குறைந்திருப்பதற்குக் காரணம் இல்லை. மத்திய சர்க்கார் போட்ட வருமான வரி இதற்கு முக்கியமான காரணம் ஆகும்.

திரு. எஸ். முருகையன்: தலைவர் அவர்களே, வேறு மாநில பரிசுச் சீட்டுகள் தமிழகத்தில் ஏராளமாக வந்திருப்பதால் வருமானம் குறைந்துவிட்டது என்று சொல்லப்படுகிறதே அது உண்மையா? தமிழக அரசு பரிசுச் சீட்டுகள் வேறு மாநிலங்களுக்கு அனுப்பப்பட்டு அதிகமாக அங்கே விற்பனை ஆகின்றதா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: வருமான வரியினால் எப்படிப் பாதிப்பு ஏற்பட்டிருக்கிறதோ அதைப்போல வேறு மாநில பரிசுச் சீட்டுகள் இங்கே புழங்குவதாலும் இத்தகைய பாதகம் ஏற்பட்டிருக்கிறது என்று கருதப்படுகிறது.

திரு. கே. டி. கே. தங்கமணி: 1969-ம் ஆண்டிலிருந்து 18 கோடி ரூபாய் வரையிலும் நிகர லாபம் கிடைத்திருக்கிறதே, அதில் பெரும் பகுதித் தொகை எந்த முறையில் செலவழிக்கப்பட்டது என்பதை அறியலாமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: நான் ஏற்கெனவே சொன்னேன்—தேசிய பாதுகாப்பு நிதிக்கு நாம் 6 கோடி ரூபாய் கொடுத்தோம். அதில் இந்தப் பரிசுச் சீட்டின் மூலமாகக் கொடுத்தது இரண்டு கோடி ரூபாய் ஆகும். பிச்சைக்காரர் மறு வாழ்வு நிதிக்கு 43 லட்ச ரூபாய் கொடுத்திருக்கிறோம். ஸ்பெஷல் வெல்ஃபேர் பண்டுக்கு ரூ. 5,34,18,260 அளிக்கப்பட்டிருக்கிறது. இதன்னியில், கிராமப்புற சாலை வசதிகள், கல்வி, மருத்துவ வசதிகள், பிச்சைக்காரர் மறு வாழ்வு போன்று இப்படிப் பல்வேறு துறைகளில் இந்தத் தொகை செலவிடப்படுகிறது.

1974 மார்ச் 7]

திரு. தி. சி. ஆ. சிவப்பிரகாசம் : பரிசுச் சீட்டுக் குலுக்கலில் சட்ட மன்ற உறுப்பினர் யாராவது பலன் அடைந்திருக்கிருரா ? (சிரிப்பு)

மாண்புமிகு டாக்டர் மு. கருணுநிதி : அப்படியிருந்தால், யார் யார் பெயரெல்லாமோ பத்திரிகைகளில் கொட்டை எழுத்துக்களில் வரும்போது, இதுவரை வராமல் இருந்திருக்காது. (சிரிப்பு)

திரு. எம். சுரேந்திரன் : பரிசுச் சீட்டின் மூலம் வருகின்ற பணம் இன்ன இன்ன வழியில்தான் செலவு செய்யப்பட வேண்டும் என்று ஏதாவது வழிமுறை வகுக்கப்பட்டிருக்கிறதா ? அல்லது அவ்வப்போது தோன்றுகிறபடி செலவிடுவது என்ற முறை வகுக்கப்பட்டிருக்கிறதா? பரிசுத் தொகைக்கு வருமான வரி போடப்படுவது தமிழ்நாட்டுக்கு மட்டும் தான அல்லது இந்த நாட்டிலிருக்கும் மற்ற எல்லா மாநிலங்களுக்கும் உண்டா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணுநிதி : எல்லா மாநிலங்களுக்கும் போடப்படுகிறது. மத்திய அரசை, நான் குறை கூறுவதாகக் கருதிக்கொண்டு, வக்காலத்து வாங்கவேண்டிய அவசியம் இல்லே. எல்லா மாநிலங்களுக்கும் போடப்படுகிறது. நான் சொல்வது— ஆயிரம் ரூபாய்க்குமேல், அதாவது 1,500 ரூபாய் பரிசு விழுகிறது என்ருல், அதற்கும் 34 சதவீதம் வருமான வரி போடப்படுவதால், தங்களுக்கு ஆயிரம் ரூபாய் கூட 'லம்ப் ஸம்' மாகக் கிடைக்காமல் குறைந்துதானே கிடைக்கப்போகிறது என்ற எண்ணம் பரிசுச் சீட்டு வாங்குகிறவர்களிடம் ஏற்பட்டுவிடுகிறது. வருமான வரி என்பது லட்சக்கணக்காக ஆண்டுதோறும் சம்பாதித்துக் கொண்டிருக்கிறவர்களுக்கு விதிக்கப்பட்டால் அதை வரவேற்கலாம் ; பாராட்டலாம். ஆனல் வாழ்க்கையில் எப்போதோ ஒரு முறை ஒரு லட்சம், அல்லது ஐம்பதாயிரம், அல்லது பத்தாயிரம், அல்லது ஐயாயிரம், பரிசு மூலமாகப் பெறுகிருர்கள் என்ருல், அவர்களுக்கும் வருமான வரி போடுவதால் பரிசுச் சீட்டுகள் வாங்கும் ஊக்கம் அவர்களுக்குக் குறைந்து விடுகிறது என்பதைத் தான் நான் எடுத்துச் சொன்னேன்.

திரு. சி. வி. எம். அண்ணுமலே : பேரவைத் தலேவர் அவர்களே, பரிசுச் சீட்டு மூலம் வருவாய் குறைவதற்குக் காரணம் இதனுடைய முக்கியத்துவத்தை மக்கள் உணரும்படி விளம்பரங்கள் செய்யப் படவில்லே என்பதா ? சரியான முறையில் மக்கள் புரிந்துகொள்

வதற்கு வாய்ப்பை உருவாக்கும் நிலையில் திரைப்படங்கள் மூலமாகவும், கலை நிகழ்ச்சிகள் மூலமாகவும், நாடகங்கள் மூலமாகவும் அரசு விளம்பரம் செய்வது இந்தத் திட்டத்தைப் பயனுள்ளதாக்கும் அல்லவா ?, அந்த வகையில் அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : ஏற்கெனவே அதற்குப் போதுமான அளவு விளம்பரம் செய்யப்படுகிறது. சுமார் நாற்பது, ஐம்பதாயிரம் ரூபாய் செலவில் ஒரு திரைப்படம்கூட எடுக்கும் முயற்சிகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 312, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

திரு. நா. வீராசாமி : சார், ஒரு முக்கியமான கேள்வி. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இன்னும் நிறைய கேள்விகள் இருக்கின்றன. வினா எண். 312, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

முதியோர் உதவித் தொகை.

* 312 வினா—**திரு. சோ. அழகர்சாமி :** மாண்புமிகு முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) 1967-ம் ஆண்டு நமது மாநிலத்தில் முதியோர் பென்ஷன் திட்டத்தின் கீழ் எத்தனை பேருக்கு உதவித்தொகை வழங்கப்பட்டு வந்தது ?

(இ) தற்போது மேற்படி திட்டத்தின் கீழ் எத்தனை பேருக்கு உதவித்தொகை வழங்கப்படுகிறது ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :

(அ) 1967 ஜனவரியில் உள்ளவாறு 43,121 பேருக்கு முதியோர் உதவித்தொகை வழங்கப்பட்டு வந்தது.

(இ) 22—11—1973-ஆம் நாளன்றின்படி 44,505 பேருக்கு முதியோர் உதவித்தொகை வழங்கப்பட்டு வருகிறது.